10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 324 வெள்ளிக்கிழமை 13 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18



தற்காலிக அமைச்சர்களாக

## நால்வர் நியமனம்

கொழும்பு,ஏப்.13

புதிய அமைச்சர்கள் நால்வர் நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் தற்காலிகமாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

இதன்படி சரத் அமுனுகம 06▶

## முடிவுக்கு வந்தது வேலைநிறுத்தம்

கொழும்பு,ஏப்.13

கடந்த பல நாட்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக, அனைத்து 06▶



## ஆளுநர் நியமனத்தில் வடக்கு புறக்கணிப்பு

கொழும்பு,ஏப்.13

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் தவிர்த்து ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் நேற்றையதினம் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மத்தியமாகாணத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் பதவி வெற்றிடமாக உள்ளது. அத்துடன் வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட கே.சி லோகேஸ்வரன் வடமேல் மாகாணத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் வடக்கு மாகாணத்துக்கு ஆளுநர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. 06▶

# காணாமற்போனோர் இன்னும் உயிரோடுதான்

தடுப்பிலிருந்து வந்தவர் தகவல்



வவுனியா, ஏப்ரல் 13

காணாமல் போனதாகக் கூறப்படும் பலர் தடுப்பு முகாம்களில் சுய நினைவின்றி வேதனையுடன் உள்ளதாக பூஸா தடுப்பு முகாமில் இருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் அதிர்ச்சிகர தகவலை தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகவியலாளர்களை சந்தித்த நவரத்தினம் நிசாந்தன் (வயது 31) என்ற முன்னாள் போராளியே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

என்னைப்போலவே பலரும் தடுப்பில் பல இன்னல்களை சந்தித்து வேதனைகளுடன் இருக்கின்றார்கள். எனது உயிருக்கு ஆபத்து வந்தாலும் பிரச்சினையில்லை. அரசாங்கம் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். பல தாய்மார் தங்கள் பிள்ளைகள் காணாமல் போய்விட்டதாகக் கூறுகின்றார்கள். 06▶



அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில்

## லண்டன் செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஏப்.13

இலங்கை அரசியலில் பரபரப்பான நிலைமை நீடித்து வரும் நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரித்தானியாவுக்கு விஜயம் 06▶

எதிர்க்கட்சியிலிருந்து

## ஆதரவு

கொழும்பு,ஏப்.13

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து, அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேரும் எதிர்க்கட்சியில் இருந்து ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதியுடன் தொடர்ந்து இணைந்து செயற்படவுள்ளதாக 06▶

ஐரோப்பா செல்ல முற்பட்ட ஐந்து இலங்கையர்கள்

## அஸர்பைஜானில் கைது



கொழும்பு,ஏப்.13

அஸர்பைஜான் ஊடாக சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்கு செல்ல முயற்சித்த ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அஸர்பைஜான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அஸர்பைஜான்-ஈரான்-துருக்கி வழியாக 06▶

## சம்பந்தனின் இரட்டை வேடமே தேசிய அரசு சிதைய காரணம்

கொழும்பு,ஏப்.13

எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனின் இரட்டை வேடமே தேசிய அரசாங்கத்தில் தற்போது சிதைவினை ஏற்படுத்தியுள்ளது என குற்றம்சாட்டிய கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் 06▶

## அரசியல் நெருக்கடியை தீர்க்க நாடாளுமன்றை கலையுங்கள்

கொழும்பு,ஏப்.13

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமெனில் நாடாளுமன்றை அதன் காலத்துக்கு முன்னர் கலைக்க வேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் மத்தியகுழு உறுப்பினரும் 06▶

மாந்தை மேற்கு பிரதேச சபையை

## ஐ.தே.க.விடம் இழந்தது கூட்டமைப்பு

மன்னார்,ஏப்.13

மாந்தை மேற்கு பிரதேச சபையை, முதன் முதலாக ஐ.தே.க.விடம் பறி கொடுத்தது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

மாந்தை மேற்கு பிரதேச சபை தலைவர் மற்றும் உப தலைவர் தெரிவுகள் நேற்று காலை 10 மணியளவில் மாந்தை மேற்கு பிரதேச சபயில் 06▶



# நல்லாட்சி அரசாங்கத்தின் இரட்டை வேடம் அம்பலம்




வவுனியா,ஏப்.13

எமது மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாத நிலை காணப்படுகிறது. ஆனால், அரசாங்கம் பெருங்காடுகளை அழித்துத் தென்பகுதி மக்களை இங்கு குடியேற்றம் செய்கிறது. இது நல்லாட்சி அரசாங்கத்தின் இரட்டைவேடத்தையே காட்டுகிறது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா தாயகம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'மகாவலித் திட்டம் என்ற போர்வையில் வவுனியா வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றும் வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2009 இற்குப் பின்னர் பல்லாயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு இராணுவத்தின் ஒத்துழைப்புடன் மக்கள் அங்கு குடியேற்றப்பட்டுள்ளனர். மகாவலி போன்ற திட்டங்கள் எமக்கு மிகவும் அவசியமானதாகவே உள்ளது. ஆனால், இவற்றோடு சிங்களக் குடியேற்றங்களும் வருவதே பாரிய பிரச்சனையாக உள்ளது. மகாவலித் திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் முல்லைத்தீவுப் பகுதியில் குடியேற்றப்பட்ட மக்களில் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை.

வேலி அடைப்பதற்கு ஒரு தடியைக் கூட வெட்ட முடியாத நிலை இருக்கும் போது, மனிதரே செல்ல முடியாத பெரும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகளை அரசாங்கம் அழித்துள்ளது. அத்துடன் அங்கு இருந்த மரங்கள் எல்லாம் மிகவும் விலைமதிப்பற்றவை. கோடிக்கணக்கான பெறுமதியுடைய அந்த மரங்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை யாருக்கும் புரியாமலேயே உள்ளது.

இங்கு காணிகள் இல்லாமல் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த திட்டங்களிலே எமது மக்களை குடியேற்ற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இந்த விடயங்கள் தொடர்பாக எமது மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்' என்று அவர் தெரிவித்தார்.

## சிக்கியது மீரிகம திருட்டுக் கும்பல்

மீரிகம, ஏப்.13

மீரிகம பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட வந்த கும்பல் ஒன்றைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீரிகம மல்லஹாவ பகுதியில் பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போதே குறித்த கும்பல் சிக்கி உள்ளது .

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையைத் தொடந்து, இவர்கள் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை இந்தக் குழுவின் தலைவர் உட்பட மேலும் இருவரை வேவல் தெனிய பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

## கலால் திணைக்களம் விசேட கண்காணிப்பு

கொழும்பு, ஏப்.13

புத்தாண்டு பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, கலால் திணைக்களம் நாடு முழுவதும் விசேட கண்காணிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உள்ளது.

நாடெங்கிலும் மதுபானம் சார்ந்த குற்றங்களை கட்டுப்படுத்தி, மதுபான விற்பனை அனுமதி பெற்ற இடங்களில் நிகழும் மோசடிகளை தடுத்து நிறுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ள இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனப் பொது மக்களிடம் கலால் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் எந்தவொரு இடத்திலும் மதுபானம் சார்ந்த குற்றங்களோ, ஊழல் மோசடிகளோ நிகழுமாயின் அதுபற்றி 0112 045 077 என்ற தொலைபேசி இலக்கத்தின் வாயிலாகவோ அல்லது 0112 877 882 பக்ஸ் இலக்கத்ததின் ஊடாகவோ அறிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## வவுனியாவில் சிக்கின போலி நாணயத்தாள்கள்



வவுனியா, ஏப். 13

வவுனியாவில் போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், புதிய பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய கலாவத்தையைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் சோதனையிட்டனர். இதன்போது அவரிடமிருந்து ஆயிரம் ரூபா நோட்டுக்களாக 45 ஆயிரம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர் விசேட அதிரடிப்படையினருக்கு சமையல் செய்பவர் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அத்துடன், அவர் பல போலி நாணயத்தாள்களைப் பயன்படுத்தி வவுனியா வர்த்தக நிலையங்களில் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், பொது மக்கள் மிகவும் அவதானமாக பணக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுமாறு கோரப்பட்டுள்ளதுடன், ஆயிரம் ரூபா பண நோட்டுக்களை பரீட்சித்து பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கிளி., முல்லை. மாவட்டங்களில் 3,762 வெடிபொருட்கள் அகற்றல்!



கிளிநொச்சி, ஏப்.13

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 3 ஆயிரத்து 762 அபாயகரமான வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் சார்ப் நிறுவனத்தால் கடந்த பதினாறு மாதங்களில் இந்த வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் , மூன்று இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொளாயிரத்து மூன்று சதுரமீற்றர் பரப்பளவில் இருந்தே இந்த அபாயகரமான வெடிபொருட்களை அகற்றப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தில் முன்னாள் போராளிகள் மற்றும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 118 பேர் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் 11 பெண் பணியாளர்களும் அடங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஆ)

## நுரைச்சோலையில் மின் உற்பத்தி ஸ்தம்பிதம்

நுரைச்சோலை, ஏப்.13

திருத்தப் பணிகள் காரணமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் முதலாம் கட்டமைப்பை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தால் சாம்பல் நிறப் பொருள் கடல் நீருடன் கலப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால், அங்கு திருத்தப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தால் நாளாந்தம் 900 மெகா வோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைத்துக்கொள்ளப்படுகிறது.

இதன் முதலாம் கட்டமைப்பு செயலிழந்து உள்ளமையால் நாளாந்தம் 300 மெகாவோட் மின்சாரத்தை இழக்க வேண்டி ஏற்படுவதாக மின்சாரப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

## 'ஐஸ்' போதைப் பொருளுடன் பெண் கைது

கொழும்பு, ஏப்.13

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து 'ஐஸ்' எனப்படும் ஒருவகைப் போதைப் பொருளுடன் இந்தியப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதான குறித்த பெண், நேற்று அதிகாலைகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து 212 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஆ)

## 2,500 இ.போ.ச. பஸ்கள் நாடுமுழுவதும் சேவையில்

கொழும்பு, ஏப்.13

பண்டிகைக் காலத்தில் சொந்த ஊர் திரும்பும் பயணிகளின் நலன்கருதி , இரண்டாயிரத்து 500 பஸ்கள் சேவையில் ஈடுபட உள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியன இணைந்து இந்த சேவைகளில் ஈடுபட்டுள்ளன.

நாட்டின் முக்கியமான நகரங்களில் இருந்து ஏனைய பாகங்களுக்கு இந்த பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு மேலதிக பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இந்த பஸ்களில் பயணம் செய்யும் எந்தவொரு பயணியும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடக் கூடுதலான கட்டணத்தைச் செலுத்தத் தேவையில்லை.எவரேனும் கூடுதலான கட்டணம் கேட்டால் தொலைபேசி வாயிலாக முறையிடலாம். இதற்கு 1955 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுமாறு ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி.ஹேமச்சந்திர தெரிவித்தார். (ஆ)

## விவசாயிகளுக்கு நிவாரணம்!

புத்தளம் , ஏப்.13

புத்தளம் மாவட்டத்தில் கடுமையான வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்காக 600 ஏக்கர் சோளப் பயிர்ச்செய்கைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

வறட்சியால் இரண்டு போகங்களுக்கு எத்தகைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத பிரதேசங்களைச்சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு, நிவாரணம் வழங்கும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இங்கினிமிட்டிய திட்டத்தின் அடிப்படையில், மிகவும் குறைந்த அளவில் உள்ள நீரைப் பயன்படுத்தி இந்த விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும், சூரிய சக்தியால் நீர் பம்பிகளை இயக்கி நீரைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம், களை எடுக்கும் இயந்திரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம், இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாடுகளை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தி, விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நிவாரணம் வழங்கும் வகையில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 13 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# காலமறிந்து கருமம் செய்க

யாழ்.மாநகரசபையின் முதல் அமர்வு, சிலை அமர்வாக நடைபெற்று முடிந்திருக்கிறது. தியாக தீபம் திலீபனுக்கு முன்னர் தூபி அமைந்திருந்த இடத்துக்கு அருகில் புதிதாக இன்னொரு தூபி அமைப்பதோடு, அவர் உண்ணாநோன்பிருந்த இடத்திலும் தூபி அல்லது சிலை அமைக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தோடு கிட்டுப் பூங்காவையும் புனரமைத்து பழையபடி அதே பெயரோடு இயங்கச் செய்யவேண்டும் எனவும், வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட வேண்டுமெனவும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வழக்கமாக இந்த விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஈ.பி.டி.பியினரும் "புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குச் சிலை வைப்பதென்றாலும் நாங்கள் தயார் தான்" என்று தலையாட்டியுள்ளனர். மக்களுக்காகப் போரடிய மறவர்களின் நினைவாக தூபிகளும், சிலைகளும், பூங்காக்களும் அமைப்பது தவறல்ல. அது தேவையான விடயங்கள் தான்.

ஆயினும் அவைதான் மக்களுக்குத் தேவையான அவசரமான விட்யங்கள் அல்ல. முதலில் மக்களின் அத்தியாவசிய விடயங்களைக் கவனித்துக் கொண்டு, இந்தச் சிலை அமைப்புகளையும், தூபி நிறுவல்களையும், பூங்காப் புனரமைப்புகளையும் இன்னொரு பக்கத்தால் நிறைவேற்றிக் கொண்டு செல்லலாம்.

முதல் நாள் அமர்வில் எவருமே யாழ்ப்பாணம் மாநகரசபையின் உடனடிப் பிரச்சினையான திண்மக் கழிவகற்றல் குறித்தோ, அல்லது கல்லூண்டாய்வெளி குப்பைமேடு குறித்தோ வாய் திறக்கவில்லை. அத்தோடு முறையற்ற கட்டட அமைப்புகளால் யாழ்மாநகர சபைக் குட்பட்ட பகுதிகளில் வடிகாலமைப்பு பல இடங்களில் சீர்கெட்டுப் போயிருப்பது குறித்தோ, அவற்றை எப்படிச் சீர் செய்யலாம் என்பது பற்றிய தீர்வுகளோ முன்வைக்கப்படவில்லை. யாழ்.மாவட்டத்திலேயே அதிகளவான விபத்துக்கள் சம்பவிப்பதும் யாழ்.மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் தான். அப்படி விபத்துக்கள் இனியும் நிகழாமல் செய்யவேண்டிய மாற்றுவழிகளை மாநகசர சபையில் எவரும் முன்வைத்ததாகத் தெரியவில்லை. அதைவிட மாரிகாலத்தில் கிராமப்புறங்களில் கூட இப்போது வெள்ள அனர்த்தத்தால் மக்கள் பெரிதாகப் பாதிப்புறுவதில்லை. ஆனால் பொம்மை வெளி, நாவாந்துறை, நல்லூர் யமுனா ஏரிப் பகுதி என்பவற்றில் வசிக்கும் மக்கள் கொஞ்சம் கூடுதலாக மழை பொழியும் ஒவ்வொரு தருணத்திலும் வீட்டை விட்டு வெளியேறுமளவுக்கு வெள்ளத்தால் அலைக் கழிக்கப்படுகின்றார்கள். அதைப் பற்றியும் மாநகரசபை உறுப்பினர்கள் எவரும் அக்கறை கொள்ளவில்லை. மாரி வந்தவுடன் பரவும் டெங்குச் சூழலைக் கட்டுப் படுத்துவது குறித்தும் கதைபடவில்லை.

தேர்தல் காலத்தில் 'மாநகரசபைக் குப்பைகளை நானே அள்ளிச் சுத்தமாக்குவேன்', 'கல்லூண்டாய் வெளிக் குப்பை மலையைத் தனியனாகத் தகர்ப்பேன்', 'வெள்ளம் வரமால் அணைகட்டுவேன்' என்றெல்லாம் இப்போதைய மாநகரசபை உறுப்பினர்கள் முழங்கித் தள்ளியிருப்பார்கள். ஆனால் அந்த முழக்கத்தை முதல் நாள் அமர்வு நடப்பதற்கிடையிலேயே அவ்வளவு விரைவாக மறந்துபோனதுதான் விந்தையான விடயம்.

அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளியின் உயிரைக் காப்பாற்ற வேண்டியதுதான் முதன்மையான பணி. அதைவிடுத்து அந்த நோயாளி குணமடைந்து வீட்டுக்குச் சென்றால் கட்டில் வாங்குவது குறித்து யோசித்துக் கொண்டிருப்பது சூழலுக்குப் பொருத்தமற்றது. காலமறிந்து, பிரச்சினையறிந்து மாநகரசபை உறுப்பினர்கள் இனியாவது கருமம் செய்ய முன்வரவேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# மலையகத்தில் கடும் மழை வெள்ளத்தில் மூழ்கின வீதிகள்



ஹட்டன்,ஏப்.13

மலையகப் பகுதியில் ஹட்டன், நோர்வூட், கொட்டகலை, வட்டவளை, மஸ்கெலியா, தலவாக்கலை ஆகிய பகுதிகளில் நேற்று மதியம் 2 மணி முதல் 4 மணி வரை பெய்த கடும் மழை காரணமாக போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, ஹட்டன் நகரப் பகுதியில் சில வீதிகள் நீரில் மூழ்கின.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்பு பகுதியில் நீர் செல்லும் வடிகான்கள் மூடியதனால் நீர் வெளியேறி வீதிக்கு சென்றதனால் அவ்வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நகரின் பாதைகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததுடன், நகருக்கு வருகைதந்தோர் பாதிப்புக்குள்ளாகினர்.

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியிலும், ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியிலும் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், வீதி வழுக்கும் தன்மையாக இருப்பதனாலும் வாகன சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.


# முல்லை–பரந்தன் வீதியில் தடம்புரண்டது ஹையேஸ்

முல்லைத்தீவு,ஏப்.13

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் நேற்று நண்பகல் ஹையேஸ் வாகனம் தடம்புரண்டு ஏற்பட்ட விபத்தில் 8 பேர் காயமடைந்தனர்.

முல்லைத்தீவு - செம்மலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹையேஸ் வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளாகியது. இதில் பயணித்த 8 பேர் காயமடைந்தனர்.






# 24 கிலோ தங்கத்துடன் தலைமன்னார் கடலில் மூவர் சிக்கினர்

கொழும்பு,ஏப்.13

170 மில்லியன் ரூபாய் பெறுமதி வாய்ந்த 24 கிலோகிராம் தங்கத்துடன் சந்தேகநபர்கள் மூவர், தலைமன்னாரில் வைத்து கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட குறித்த தங்கத்தை, நேற்று யாழ்ப் பாண சுங்கத் திணைக்களத்தில் கையளித்ததாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தினேஷ் பண்டார தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் படகு ஒன்றின் மூலம் இந்தியாவுக்கு தங்கம் கடத்தியதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தினேஷ் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

# வல்லை பாலத்துக்கருகில் தடம்புரண்டது 'படி'



வல்லை,ஏப்.13

வடமராட்சி வல்லைப் பகுதியில் நேற்று காலை வேகக் கட்டுபாட்டை இழந்த 'படி' ரக வாகனம் பாலத்துக்கு அருகில் தடம்புரண்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி விற்பனைப் பொருள்களை ஏற்றிச் சென்ற 'படி' ரக வாகனமே வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வல்லைப் பாலத்துக்கு அருகே தடம்புரண்டது. விபத்துத் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.தே.க.வுக்கு நான்கு செயலாளர்கள்

கொழும்பு,ஏப்.13

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு மூவரை மேலதிக செயலாளர்களாக நியமிக்க கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, பொதுச் செயலாளர் பதவிக்கு மேலதிகமாக கட்சியின் ஊடக செயலாளர், பிரசார செயலாளர், தொழிற்சங்க செயலாளர் போன்ற பதவிகளை உருவாக்கி அதற்கு அதிகாரிகளை நியமிக்கவும் நேற்று முன்தினம் கூடிய குழு ஆலோசித்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி கூடவுள்ள ஆலோசனைக் கூட்டத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் சகல பொறுப்புக்கள் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு குழு உடன்பட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர், தலைவர், பொருளாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகளுக்கும் யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதன்போது ஆலோசிக்கப்படவுள்ளது.

19 ஆம் திகதி எடுக்கப்படும் சகல தீர்மானங்களும் எதிர்வரும் 7 ஆம் திகதி சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் மே தின கூட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளதாக ஐ.தே.க.வின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார தெரிவித்துள்ளார்.

(த)

## இன்று நாளும் கோளும்

13.04.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 30 ஆம் நாள்
துவாதசி மு.ப. 08.18 வரை | பூராட்டாதி பி.ப. 03.43 வரை | குளிகை 07.30-09.00
இராகுகாலம் 10.30- 12.00 | சுபநேரம் காலை 12.30 - 01.30 | எமகண்டம் காலை 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | பக்தி | பாராட்டு | கவனம் | தனம் | இலாபம் | சோர்வு | வரவு | ஆதாயம் | இரக்கம் | நன்மை | பெருமை |



# நுண் கடன் திட்டத்தில் அரசியல் செல்வாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 13

நுண் கடன்களை வழங்கி வரும் தனியார் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை முற்று முழுதாக தடுத்து நிறுத்த முடியாமைக்கு அரசியல் பின்னணியே காரணமாகும் என்று வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் 2018 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது ஆலோசனைக் குழுக்கூட்டம் மகளிர் விவகார அமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நுண் கடன்களை வழங்கும் தனியார் நிதி நிறுவனங்கள், குடும்பப் பெண்களை இலக்கு வைத்து கடன் பொறிக்குள் சிக்க வைத்துவரும் போக்கு தொடர்ந்து வருகின்றது. இந்தக்கடன் பொறிக்குள் இருந்து எமது மக்களை பாதுகாப்பதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம். இருந்த போதிலும் கடன் வழங்கும் தனியார் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை முற்றிலும்தடுத்து நிறுத்த முடிவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், மாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரட்ணம், கே.ரி.லிங்கநாதன், ஆர். ஜெயசேகரம் மற்றும் அ.பரஞ்சோதி, வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச்சின் புதிய செயலாளர் ரூபினி வரதலிங்கம், மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், மாகாணத் தொழிற்துறைத் திணைக்கள பணிப்பாளர் கே.சிறிமோகனன், மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் நளாயினி இன்பராஜ் மற்றும் மாகாண சமூக சேவைகள்திணைக்கள பணிப்பாளர் எஸ்.வனஜா ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ச.தொ.ச. தலைவர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஏப்.13

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நலின் ருவன்ஜீவ பெர்னாண்டோ பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே, நீதவான் அவரைப் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

கடந்த2014 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டுப் பகுதியில் 39 மில்லியன் ரூபா அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் நிதி குற்றவியல் விசாரணை பிரிவால் நலின் ருவன்ஜீவ பெர்னாண்டோ கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)


## பிணைமுறி விவகாரம்: விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, ஏப்.13

மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, பெர்பச்சுவல் ட்ரசரிஷ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன அலோசியஸ் மற்றும் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில், இவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போதே, நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஆ)



## கட்சி தாவும் எண்ணம் அறவே இல்லை

கொழும்பு, ஏப்.13

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வேறு கட்சிகளுக்குத் தாவும் எண்ணம் அறவே இல்லை என்று ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வாக்களிக்கப்பட்டதைப் போல நடைபெற வேண்டும். எதிர்வரும் 30ஆம் திகதி கட்சியில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதியை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். அதே நேரம் நாங்கள் கட்சி தாவி வேறு கட்சிகளில் இணையப் போவதாக ஒரு வதந்தி பரப்பப்பட்டு வருகின்றது. அது உண்மை இல்லை" என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## கிளிநொச்சியில் தங்க வேட்டை



கிளிநொச்சி, ஏப்.13

கிளிநொச்சி அறிவியல் நகர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலி அமைப்பினரால் இறுதிக்கட்டப் போர்க் காலத்தில் புதைத்து வைக்கப்பட்ட தங்கம் மற்றும் ஆயுதங்களை மீட்கும் பணியில் பொலிஸார் மற்றும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, நீதிமன்ற அனுமதியுடன் இந்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுமுன் தினம் ஆரம்பமான இந்த அகழ்வுப் பணிகள் மூன்று மணிநேரம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், எந்த விதமான பொருட்களோ தடயங்களோ கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தங்கத்தைப் புதைத்து வைத்துள்ளதாகக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பல முறை அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், படையினருக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## தலைவர் தெரிவு



கொழும்பு, ஏப்.13

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவராகப் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் ஹிரோஷிமா பல்கலைக்கழக முதுமானி பட்டதாரியும், கொழும்பு பல்கலைக்கழக கல்வியற் துறை முன்னாள் பீடாதிபதியும் ஆவார்.

1991 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு, முதன் முதலாக தமிழர் ஒருவரை நியமித்துள்ளமை, மகிழ்ச்சியாக உள்ளது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ஆ)

## சிறுவனின் சடலம் மீட்பு

மாங்குளம்,, ஏப்.13

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி வசந்த நகர் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து சிறுவன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. சதீஸ்குமார் கனிஸ்டன் (வயது-8) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவனின் வீடு அமைந்துள்ள காணியில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



கரவெட்டி பிரதேச செயலகத்தில் புதுவருடத்தை முன்னிட்டு வட மாகாணத் தொழில்துறை அமைச்சின் அனுசரணையுடன் தொழில்துறை சந்தைக் காட்சிப்படுத்தல் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக கரவெட்டி உதவி பிரதேச செயலர் ரஜீவ் கலந்து கொண்டார்.

வெப்பம் அதிகரிப்பு:

# யாழ். சிற்றங்காடி வர்த்தகர்கள் பாதிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட சிற்றங்காடி வர்த்தகர்கள் தற்போது அதிகரித்து வரும் வெப்பநிலையால் பாதிப்புக்குள்ளாகி வருவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நடை பாதை வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு, யாழ்ப்பாண பஸ் நிலையத்துக்கு அருகில் 76 கடைத் தொகுதிகளைக் கொண்ட சிற்றங்காடி ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அந்த அங்காடித் தொகுதியை வெயில், மழை போன்றவற்றில் இருந்து பாதுகாக்கும் வகையில் மேற் புறம் தகரம் மற்றும் பிளாஸ்ரிக்கால் ஆக்கப்பட்ட வெண்ணிற சீற் பொருத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பொருத்தப்பட்ட வெண்ணிற சீற்றின் ஊடாக அதிகளவு வெப்பம் உள்வாங்கப்படுவதால் வர்த்தகர்கள் பெருமளவு பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர்.

இங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிறுநீர் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள், தலை வலி, முடி உதிர்தல் போன்ற நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆடைகள் வெயிலின் தாக்கத்தால் வெளிறிக் காணப்படுவதால் வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் அவர்கள் இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வரும் அங்காடி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# கந்தளாய் பிரதேச சபை பொதுஜன பெரமுன வசம்!



கந்தளாய், ஏப்.13

கந்தளாய் பிரதேச சபையைக் கடும் போட்டிக்கு மத்தியில் பொதுஜன பெரமுன கைப்பற்றியது.

கந்தளாய் பிரதேச சபையின் முதல் அமர்வு , பிரதேச சபை மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.எம்.சலீம் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில், பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் சமன் ஏக்கநாயக்க தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வாக்கெடுப்பில் தவிசாளருக்கு ஆதரவாக 15 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கு ஆதரவாக பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் 11 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இருவரும் வாக்களித்தார்கள். எதிராக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஏழு பேரும், சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் இருவரும் வாக்களித்தனர்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னனி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இரண்டாம் கட்டமாக பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்காகப் பகிரங்க வாக்களிப்பு இடம்பெற்றது.

இதில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த சிரேஸ்ட சட்டத்தரணி எம்.எஸ்.எம்.மதார் 12 வாக்குகளைப் பெற்று பிரதித் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ஆ)

# கடற்படையினருக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, ஏப். 13

கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பில், கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படை வீரர்கள் இருவரையும், எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று இவர்களை ஆஜர்ப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# வேதன அதிகரிப்பை வலியுறுத்தி போராட்டம்

கொழும்பு, ஏப். 13

அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கான வேதன அதிகரிப்பை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன் தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், ஒரு குடும்பத்தின் வாழ்க்கைச் செலவு, 6 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் மே தினத்துக்கு பின்னர், சம்பள அதிகரிப்பு மற்றும் ஒய்வூதியக் குறைப்பு ஆகியவற்றை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# புதுப்பொலிவுடன் பொங்கு தமிழ் தூபி




யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணப் பல்கலைகழக வளாகத்துக்குள் பொங்கு தமிழ் எழுச்சி நாள் நினைவாகப் பெயர்ப் பலகை அமைக்கப்பட்டிருந்த இடத்தில், புதிதாக நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ்த் தேசிய எழுச்சி நாளாகப் பொங்கு தமிழ் எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது.

இந்த நாளைக் கொண்டாடியதற்காக பல இளைஞர்கள் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர்நாட்டை விட்டு வெளியேறினார்கள். இதனை அடுத்து, பொங்கு தமிழ் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நினைவாக யாழ்.பல்கலைகழக வளாகத்தில் நினைவுப் பெயர் பலகை ஒன்று வைக்கப்பட்டது.

இந்த நிலையில், அந்த இடத்தில் தற்போது நினைவுத் தூபி ஒன்று கட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



## எல்லாத்தாலையும் சனத்தைத்தான் போட்டுச் சிப்பிலி ஆட்டினம்

யாழ்ப்பாணத்தை கலக்கிறதிலை இந்த "வா"....க்கள் கொஞ்சம் கடுமையாக்கிடக்கிது. முன்னாலை வாளோடை கொஞ்சம் ஆவா! இப்ப கொஞ்ச நாளா கடைக்குக் கடை வாளிலும் விட மோசமான "மாவா". இனி கொஞ்ச நாளைக்குப் பிறகு வேறை ஏதேனும் "கோவா" எண்டும் .வரும் எண்டு முதலியார் சொல்லுறார்.

உதேன் அண்ணை மாவாவைப் போடினம்? எண்டு முதலி யாழ்ப்பாண பஸ்ராண்டிலை வைச்சு ஏழுவீடு கேக்கக் கத்தி, திரும்பத் திரும்பக் கேட்டவன். எட பேசாமல் இரடா எண்டால் விழுவான் கேட்டால்தானே? அக்கம் பக்கம் பாத்திட்டுத்தான் உதுக்கு மறுமொழி சொல்லலாம் எண்டு மெதுவா இரகசியமாக் காதுக்கை சொன்னனான். ஏன் எண்டான் மூண்டெழுத்து நிக்குதாமெடா. நாங்களும் மாவாக் காறர் எண்டு நினைச்சு, கொண்டு போவிடுவங்கள் எண்டு சொன்ன உடனை ஆள் வாயைப் பொத்திவிட்டுது.

இப்ப இரண்டொரு நாளுக்கு முன்னம், வீட்டிலை கட்டில் கழண்டு போச்சிதெண்டு மரவேலை செய்யிற ஒரு பெடியைத் தேடிப்போனன். வாறன் ஐயா எண்டு வந்தான். அவன் கொண்டு வந்த ஆயுதங்களைவிட அவன் கொண்டு வந்த வெத்திலைப் பொட்டலம் பெரிசு. அந்த உடைஞ்ச கட்டிலைத் திருத்திறதுக்கு இடையிலை ஒரு பத்துப் பதினைஞ்சு தரம் விழுவான் வெத்திலை போட்டுத் துப்பி இருப்பன். அவன்ரை பொட்டலத்துக்கை கன சாமான் வைச்சிருக்கிறான். அதுக்கை கிடந்த போயிலை மட்டும் நூறு ரூபா பெறுமாம். அவன் போனாப் பிறகு கன நேரம் செண்டிது முத்தத்திலை கிடந்த வெத்திலைத் துப்பலைக் கழுவ. அப்ப முத்தத்திலை கிடந்த கறையைக் கழுவ கன நேரம் செல்லுதெண்டால் கோதாரியிலை போனதை விழுங்கிறாங்கள் எல்லே! அது வயித்துக்கை போய் என்னத்தைப் பண்ணும் எண்டு நினைக்க வருத்தமாக் கிடக்கு.

உந்தக் கிரிச கெட்ட பழக்கம் சிங்கள பஸ் றைவர் மாரிட்டைக் கூடக் கிடக்கு. எங்கையாவது பஸ்ஸைக் கொஞ்ச நேரம் நிப்பாட்டி எடுக்கிறதுக்கிடையிலை சப்பித் துப்பி வாயும் கொப்பளிச்சுப் போடுவங்கள்.

ஒருக்கா உப்பிடித்தான் ஒரு பஸ் றைவர் சப்பித் துப்பிவிட்டான். அங்காலை கலியாண வீட்டுக்குப் போன ஒரு இளஞ்சோடியளின்ரை சீலை சட்டை எல்லாம் தோஞ்சு அவைக்குக் குளிக்க வாத்தமாதிரியாப் போச்சுது. என்ன செய்யிறது? சனம் நிண்டதெண்டதையும் பாராமல் பட்டைத் தூஷணத்தாலை பேச் செண்டால் பொறி பறந்திது. றைவர் பரிகலம் இறங்கி இழிச்சுக் கொண்டு போய் அவைக்கு "சொறி" சொல்லுது. அதுகளும் பாவம் போன பணயத்தை விட்டிட்டுப் பாதியிலை திரும்பிப் போட்டுதுகள்.

இப்ப யாழ்ப்பாணத்திலை தொழில் செய்யிறதுகள் எல்லாம் மோட்டச் சையிக்கள் ஒண்டை வச்சுக் கொண்டு ஒட்டம் தானே? பின்னேரம் போலை வேலை முடிஞ்சாப் பிறகு குளிச்சு வெளிக்கிட்டு மோட்டச் சைக்கிளை எடுத்து காலுக்கை செருகினால் பிறகு பிடிக்கேலாது. முறுக்கிறது தானே? தண்ணி போட்டால் பொலிஸ் பிடிக்கும் எண்டிட்டு எந்த மாவாச் செத்தவீட்டை வாங்கிக் கொடுப்புக்கிள்ளை அடைஞ்சு வைச்சுக் கொண்டு அவைபாடு கறணம் தானே? கேட்டால் என்ன நடந்ததெண்டு சொல்லத்தெரியாத வெறியிலை சிலபேர் நிப்பினம். ஒண்டு தெரியுமே தண்ணி அடிச்சு வெறியிலை பிடிபடுகிற ஆக்களுக்கு தண்டமும் குறிப்பிட்ட மணித்தியாலம் கோட் விடுற இடத்துக்குப் போய் வேலையும் செய்ய வேணும். அது பெரிய தண்டனை எல்லே?

என்னெண்டாலும் இப்பவாவது ஐஞ்சு சந்தியிலையும், ரவுணுக்கையும் மாவாக்கார ஆக்கள் பிடிபட்டது சந்தோஷந்தான். இன்னும் இப்பிடியான ஆக்கள் கனபேர் இருப்பினம், எங்கடை கடமை எல்லாரையும் காட்டிக் குடுக்க வேணும். உந்த மாவா வருத்தைத்தைக் கொண்டு வந்தது வட இந்தியாக்காரரும், பாகிஸ்தான்காரரும்தான். இஞ்சை நீங்கள் பலகாரம் தாறமாதிரி உந்த மாவாவைத்தான் தருவினம். அடிக்கடி குடிக்கத் தேத்தண்ணியும் தருவினம். அதோடை உந்த பீடாவையும்தான் அவை வைச்சுச் சொக்கிலேட் மாதிரித் தின்னுறது.

எல்லாத்தாலையும் சனத்தைப் போட்டுச் சிப்பிலி ஆட்டுறாங்கள். என்ன நடக்கப் போகுதோ? ஆண்டவா!

**- வில்லங்கம் விநாசி**

சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் பிரதமருடன் பேச்சு

# கட்சி மாறும் படலமா?

கொழும்பு,ஏப்.13

நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்கள் தன்னுடன் நீண்டநேர சந்திப்பொன்றை நடத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பை அண்மித்த நகரான தலவத்துகொட பகுதியில் வீட்டுத் திட்டமொன்றுக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலரும் சந்தித்து கலந்துரையாடல் நடத்தினோம். அதேபோல சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் ஜனாதிபதியை சந்தித்த அதேவேளை நானும் அக்கட்சியைச் சேர்ந்த சிலருடன் சந்திப்பை நடத்தியிருந்தேன். நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வது பற்றி புதிய வேலைத்திட்டமொன்று உருவாக்குவது குறித்து இதன்போது ஆராயப்பட்டது. இந்த வேலைத்திட்டம் மிக விரைவில் அமுல்படுத்தப்படும் என நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

# இலங்கையர் அனைவருக்கும் இலத்திரனியல் சுகாதார அட்டைகள்

கொழும்பு,ஏப்.13

இலங்கையர் அனைவருக்கும் இலத்திரனியல் சுகாதார அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் சுமார் 21 மில்லியன் இலத்திரனியல் சுகாதார அட்டைகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலத்திரனியல் சுகாதார அட்டைகளின் அறிமுக வைபவம் கடந்த 07ஆம் திகதி உலக சுகதார தினத்தில் தாமரைத் தடாகத்தில் நடைபெற்றது.

இந்நிலையில், இலங்கையர் அனைவருக்கும் அவரவரின் நோய், சிகிச்சை விபரங்கள், இரத்த வகை என்பன போன்ற சுகாதார தகவல்களை உள்ளடக்கிய இலத்திரனியல் சுகாதார அட்டைகளை விநியோகிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.



எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் இந்த நடவடிக்கையை பூரணப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த அட்டை மூலம் நோயாளிகளுக்கு விரைவானதும், தரமானதுமான சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தொடர்ச்சிகள்

### சம்பந்தனின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீர்த்தி தென்னக்கோன் தற்போதைய அரசியல் பிரமுகர்கள் தேவையானபோது அரசாங்கமாகவும் தேவைகள் முடிவடைந்தவுடன் அரசாங்கத்தின் எதிர்த்தரப்பாகவும் செயற்பட்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் தற்போதைய நிலை மற்றும் கூட்டு எதிர்க்கட்சியினரின் நிலை தொடர்பில் விளக்கமளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கம் ஆட்சியை நிலைநிறுத்தி தற்போது 4 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்த காலத்திலிருந்து கடும் விமர்சனங்களை சந்தித்து வருகின்றன.

இந்த விமர்சனங்களை தாண்டி நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சி தற்போது சிதைவடைந்துள்ளது. எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் ஒருபோதும் எதிர்க்கட்சி பதவியினை வகித்ததில்லை. தனக்கு தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துடனும் தேவைகள் நிறைவேறியதன் பின்னர் எதிர்க்கட்சியாகவும் செயற்பட்டு வருகின்றார். இது எதிர்க்கட்சி தலைமை பதவிக்கு பொருத்தமான பண்பல்ல.

இந்த அரசாங்கத்தின் ஆட்சித் தலைமைத்துவத்தின் பிரதான கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியாக கணப்படுவதோடு பெரும்பான்மை விருப்பை வென்ற கட்சியாகவும் காணப்படுகின்றது. இதேவேளை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும் ஆட்சி பொறுப்புகள் சமமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் பிரதமர் ரணில் விக்கரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேர் ஆதரவு அளித்திருந்தனர். அரசாங்கத்திலிருந்து கொண்டே அரசாங்கத்துக்கு எதிராக சூழ்ச்சிகளை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலை உருவாவதற்கு அரசியல் முக்கியஸ்தர்களின் இரட்டை வேடங்களே காரணமாகும். அத்துடன் தமது பிழைகளை கருத்தில் கொள்ளாமல் நாட்டின் தலைவர் ஜனாதிபதியை குற்றம்சாட்டும் நிலைகளும் உருவாகியுள்ளன. அரசியல்வாதிகள் இரு பக்கமும் செயற்பட நினைக்கும் போது பொறுப்புள்ள அரசங்கத்தினை உருவாக்குவது சிரமமாவதோடு அரசாங்கத்தின் உறுதித்தன்மையும் சிதைவடையும்.

இரா. சம்பந்தன் தனது தனிப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றாரே தவிர வடக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்காகவோ அல்லது மக்களின் ஏனைய பிரச்சினைகளுக்காகவோ அரசாங்கத்திடம் கைகோர்க்கவில்லை என்றார்.

### காணாமற்போனோர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பல பிள்ளைகள் தடுப்பு முகாமில் சுயநினைவின்றி உள்ளார்கள். அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

2009ம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தில் நான் எனது அம்மா, அப்பாவை இழந்தேன். இரண்டு அண்ணாவும், அக்காவும் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து மாவீரர்களாகிவிட்டனர்.

அதன் பின்னர் என்னையும் 2009 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 26 ஆம் திகதி தடுப்பு முகாமுக்கு கொண்டு சென்றனர். தடுப்பு முகாம் காவலில் என்னை கடும் சித்திரவதைக்கு உட்படுத்தினார்கள்.

என்னை சின்னாபின்னமாக்கி வேதனைப்படுத்தினார்கள். எனது கால் பெருவிரல் நகத்தை பிடுங்கினார்கள். பல வேதனைகளையும் இழப்புக்களையும் சந்தித்தேன்.

பின்னர் 2017.12.26 அன்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டேன். தற்போது 85 வயது அம்மம்மாவுடன் வவுனியாவில் வசித்து வருகின்றேன்

இந்நிலையில் எனக்கு முல்லைத்தீவு வற்றாப்பளையில் 4 ஏக்கர் காணி உள்ளது. அதில் 2 ஏக்கர் தென்னந்தோப்பு. அதனையும் தற்போது இராணுவம் தன்வசப்படுத்தி வைத்து என்னிடம் தர மறுக்கின்றது.

பிரதேச செயலர் ஊடாக கடிதங்கள் கொடுத்தும் தற்போது அதனை தரமுடியாது என இராணுவம் சொல்கின்றது. நான் எனது வாழ்வில் அடுத்த கட்டத்தை நோக்கி செல்ல வேண்டும். அதற்கு எனது காணியை பெற்றுத் தருவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சித்தால் நல்லது.

எனக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கு உதவிகள் கிடைத்தால் எனது வாழ்வை கொண்டு செல்லவும் வசதியாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

### முடிவுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் பணிக்கு திரும்பாதுவிட்டால் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணியில் இருந்து சுயமாக விலகிச் சென்றவர்களாக கருதப்படுவார்கள் என்று அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று குறிப்பிட்ட அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட த் தீர்மானித்ததாக அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

### மாந்தை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம் பெற்றது. சபையின் தலைவர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஆசீர்வாதம் சந்தியோகு (செல்லத்தம்பு) மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் வேதநாயகம் மஹிந்தன் இருவரது பெயர்களும் முன் மொழியப்பட்டன.

சபையில் 25 உறுப்பினர்களில் 23 உறுப்பினர்கள் பகிரங்க வாக்களிப்புக்கு ஆதரவு வழங்கிய நிலையில் பகிரங்க வாக்களிப்பு இடம் பெற்றது. இதன் போது ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஆசீர்வாதம் சந்தியோகு (செல்லத்தம்பு) 15 வாக்குகளையும், தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர் வேதநாயகம் மஹிந்தன் 6 வாக்குக்களையும் பெற்ற நிலையில் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஆசீர்வாதம் சந்தியோகு மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 11 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 03 உறுப்பினர்களும், சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் ஆசீர்வாதம் சந்தியோகுவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர் வேதநாயகம் மஹிந்தனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 06 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இருவரும், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த இருவரும் நடு நிலை வகித்தனர்.

அதனைத்தொடர்ந்து உப தலைவர் தெரிவு இடம் பெற்றது. உப தலைவர் தெரிவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் முஹம்மத் ஹனீபா முஹம்மத் தௌபீக் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த முஹம்மத் செல்ஜி ஆகிய இருவரது பெயர்களும் முன் மொழியப்பட்டன. இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் முஹம்மத் ஹனீபா முஹம்மத் தௌபீக் 15 வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த முஹம்மத் செல்ஜி 7 வாக்குகளையும் பெற்ற நிலையில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் முஹம்மத் ஹனீபா முஹம்மத் தௌபீக் மாந்தை மேற்கு பிரதேச சபையின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

### அரசியல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக செயலாளருமான கே.டி லால்காந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதைய நிலைமை குழப்பம் நிறைந்ததாக உள்ளதுடன் அரசியல் ஸ்திரத்தன்மையற்றதாகவும் உள்ளது.

ஜனாதிபதியும்,பிரதமரும் முடிவற்ற அதிகாரப் போராட்டத்தில் இருக்கும் நிலையில் அடிக்கடி அமைச்சரவை மாற்றத்திற்குள்ளாவதை நாம் காண்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றை கலைக்குமாறு லால்காந்த தெரிவித்த போதிலும் பெருமளவான அமைச்சர்களும்,நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவி நிலைகளை கைவிடுவதில் விருப்பமற்றவர்களாகவே உள்ளனர். அவர்கள் நாடாளுமன்றின் ஆயுட்காலம் நிறைவடையும் வரை அதில் இருக்கவே விரும்புகின்றனர்.

### எதிர்க்கட்சியிருந்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் முன்னோக்கி செல்லவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே எஸ்.பி. திசாநாயக்க இவ்வாறு கூறினார்.

ஜனநாயகம், இறைமை, திருடர்களைக் கண்டுபிடித்தல் உள்ளிட்ட மக்களுக்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் தமது ஆதரவை வழங்கத் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் மக்கள் எதிர்பார்க்கும் ஜனநாயகத்தை கட்டி எழுப்பவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இயலாது எனவும் எஸ்.பி. திசாநாயக்க குறிப்பிட்டார்.

### லண்டன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய உள்ளார்.

2018 பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டனுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் லண்டனில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மாநாடு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ம் திகதி முதல் 21ம் திகதி வரையில் ஜனாதிபதி பிரித்தானியாவில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின் போது அந்நாட்டு பிரதமர் திரேசா மேயுடனும், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளது அரச தலைவர்கள் பலருடனும் ஜனாதிபதி சந்திப்புக்களை நடத்த உள்ளார்.

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் 92ஆம் பிறந்த தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### தற்காலிக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- திறன்கள் அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய - அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்பைசர் முஸ்தபா - விளையாட்டுத்துறை அமைச்சர்மலிக் சமரவிக்ரம - சமூக வலுவூட்டல், நலன்புரி, கண்டி மரபுரிமைகள் மற்றும் தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர். இதேவேளை, சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்குப் பின்னர் எதிர்வரும் 23 ஆம் திகதி மீண்டும் ஒரு புதிய அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

### ஐரோப்பா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் ஐரோப்பிய நாட்டிற்கு செல்ல முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சில் சங்கால், துருக்கி உஸ்மாண்டர், ஈரானில் ஷகி ஆகியோர் கொண்ட தனிநபர்களால் இவர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைய வழிநடத்தப்பட்டதாக அஸர்பைஜான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஆளுநர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி மேல் மாகாணத்துக்கு ஹேமகுமார நாணயக்கார, வட மேல் மாகாணத்துக்கு - கே.சி. லோகேஸ்வரன், சப்ரகமுவ மாகாணத்துக்கு - திருமதி. நீலூகா ஏக்கநாயக்க, மத்திய மாகாணத்துக்கு ரெஜினோல்ட் குரே, தென் மாகாணத்துக்கு - மார்ஷல் பெரேரா, வட மத்திய மாகாணத்துக்கு - எம்.ஜி. ஜயசிங்க, ஊவா மாகாணத்துக்கு பி.பீ. திஸாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மோடி வருகையை எதிர்த்த பிரபல இயக்குநர்கள் கைது

சென்னை, ஏப். 13

பிரதமர் மோடியின் தமிழக வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சென்னை விமான நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட, இயக்குநர்களான பாரதிராஜா, அமீர், ராம், வெற்றிமாறன், கவுதமன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்திட வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும், அதனை செயற்படுத்தாத மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், மேலாண்மை வாரியத்தை அமைத்திடக் கோரியும் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், இந்தியப் பிரதமர் மோடி நேற்று தமிழகம் வந்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் மட்டுமல்லாது, நீட், விவசாயிகள் போராட்டம் உள்ளிட்ட அனைத்திலும் தமிழகத்தை வஞ்சித்த மத்திய அரசு, மற்றும் பிரதமர் மோடியின் வருகை என்பவற்றை எதிர்த்து கறுப்புக் கொடிகள் காட்டப்படும் என தி.மு.க. உட்பட அனைத்துக்கட்சிகளும், இயக்கங்களும் ஏற்கனவே தீர்மானித்திருந்தன. அதன்படி, தமிழகம் வந்தடைந்த பிரதமர் மோடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னை விமான நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)












# எதிர்ப்புகளுக்கு மத்தியில் சென்னை வந்தார் மோடி

சென்னை, ஏப்.13

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரதமர் மோடி சென்னையை வந்தடைந்துள்ளார்.

அவர் விமான நிலையத்தில் வந்திறங்கிய சமயத்தில் அந்தப் பகுதியைச் சுற்றிக் கறுப்பு பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

அவருக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

பிரதமர் மோடியின் வருகைக்கு எதிர்ப்பு தெரவித்து, சென்னை பரங்கிமலைப் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கறுப்புக்கொடி காட்டி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், விமானநிலையத்தைச் சுற்றிய பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலனவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

**மோடி உரை:**

இதனைத் தொடர்ந்து, மாமல்லபுரம் திருவிடந்தையில் இடம்பெற்ற இராணுவக் கண்காட்சியை தொடங்கி வைத்த மோடி, காலை வணக்கம் என தமிழில் பேசி உரையைத் தொடங்கினார்.

"முதல் முறையாக தமிழ்நாட்டில் இராணுவத்தளபாடக்கண்காட்சி நடைபெறுகிறது. சோழர்கள் ஆண்ட இந்தப் பகுதியில் கூடியிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது வரலாற்றுச்சிறப்பு மிக்க கண்காட்சி ஆகும். உலகுக்கு அகிம்சையை போதித்த நாடு இந்தியா. வாழும் நாடு வெவ்வேறு என்றாலும் ஒவ்வொரு நாடும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளது." என்று அவர் தெரிவித்தார். (ஆ)

## சிரிய விவகாரம்

# ஐ.நா.சபையில் கொண்டு வந்த 3 தீர்மானங்களும் தோல்வி!



நியூயோர்க், ஏப். 13

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பில், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்பட்ட 3 தீர்மானங்களும் போதிய ஆதரவு கிடைக்காமையால் தோல்வி அடைந்தன.

சிரியாவின் கிழக்கு கவுட்டாப் பகுதிக்கு உட்பட்ட டவுமா நகரில் விமானப்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்கள் சமீபத்தில் நடத்திய விஷ வாயுத் தாக்குதலில் 70 க்கும் அதிகமானவர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்ததாக அங்குள்ள போர் நிலவரங்களை கண்காணித்து வரும் அமைப்பு தெரிவித்தது.

இந்த விஷ வாயுத் தாக்குதல் தொடர்பான ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அப்போது, சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்வதற்காக ஒரு புதிய செயலமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அமெரிக்கா முன் வைத்தது.

இந்தத் தீர்மானத்தை ரஷ்யா தனது சிறப்பு ரத்து (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்தித் தள்ளுபடி செய்தது.

அதனைத் தொடர்ந்து, சிரியாவின் இரசாயன ஆயுதப் பயன்பாடுகளைக் கண்காணிக்கும் மற்றொரு தீர்மானத்தை ரஷ்யா கொண்டு வந்தது. அந்தத் தீர்மானத்துக்கு சீனா உள்ளிட்ட 6 உறுப்பினர்கள் ஆதரவாகவும், அமெரிக்கா உள்ளிட்ட 7 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தும் வாக்களித்தனர்.

அதையடுத்து, அந்தத்தீர்மானமும் தோல்வியடைந்தது. மேலும், சர்வதேச இரசாயன ஆயுதக் கண்காணிப்பு அமைப்பின் உண்மையைக் கண்டறியும் பணி தொடர்பான ரஷ்யாவின் மற்றொரு தீர்மானமும் தோல்வியடைந்தது.

இதன்போது, "சிரிய மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மேற்கொண்ட முயற்சிக்கு ரஷ்யா என்ற ஒரே நாடு தடையாக இருப்பதைச் சர்வதேச சமுதாயம் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறது. வரலாறும் இந்தக் குற்றத்தை பதிவு செய்யும்." என்று ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹேலி தெரிவித்துள்ளார். (ஆ)

# இந்திய மாநிலங்கள் இனி தனி நாடாகும்



ஆலந்தூர், ஏப். 13

ரஷ்யா போன்று இந்தியாவிலும் மாநிலங்கள் தனி நாடுகள் ஆகும் நிலை ஏற்படப்போகிறது என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"நியூட்ரினோவால் இந்தியாவில் உள்ள 22 அணு உலைகளில் உள்ள அணுக் கழிவுகள் இங்கு கொட்டப்படும். நியூட்ரினோவால் கேரளா, தமிழ்நாடு ஆகிய 2 மாநிலங்களில் உள்ள 18 அணைகள் உடையும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது. நான் விளையாட்டுக்கு எதிரானவன் அல்ல. நான் ஒரு விளையாட்டு வீரன். கிரிக்கெட் விளையாட்டு மற்றும் ரசிகர்களை நான் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால், தமிழகமே கொந்தளிக்கும்போது இது தேவையா. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு எதிரான போராட்டம், தமிழக மக்களின் எண்ணங்களை உலகத்துக்கு எடுத்துக் காட்டி இருக்கிறது. போராட்டத்தில் தடியடி நடத்தியது கண்டிக்கத்தக்கது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# எழுந்து நின்று பாடாத கர்ப்பிணி கொலை!

## பாகிஸ்தானில் கொடூரம்

கராச்சி, ஏப்.13

பாகிஸ்தானில் நடந்த கச்சேரி நிகழ்ச்சி ஒன்றில் எழுந்து நின்று பாடாத கர்ப்பிணிப் பாடகி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் சிந்து மாகாணத்தில் உள்ள லர்கானா பகுதியில் கச்சேரி ஒன்று நடைபெற்று கொண்டிருந்தது. அதில் பாடகி சமீனா சமோன் (வயது-24) என்பவர் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்.

அப்போது பார்வையாளர்கள் மத்தியில் இருந்த தரிக் அகமது ஜடோய் என்பவர், சமோனை எழுந்து நின்று பாடுமாறு கூறியுள்ளார். தான் கர்ப்பிணி என்பதால் நின்று கொண்டு பாட முடியாது என அவர் மறுத்துள்ளார். இதனால், ஆத்திரம் அடைந்த தரிக் அகமது தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து சரமாரியாகச் சுட்டார். இதில் குண்டுகள் துளைத்து சமோன் படுகாயம் அடைந்து கீழே விழுந்தார்.

அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவரைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் சமோன் இறந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளைப் பாகிஸ்தான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# மும்பைக்கு மீண்டும் மூக்குடைந்தது!

ஹைதராபாத், ஏப்.13

ஐ.பி.எல் தொடரில் தான் களமிறங்கிய இரண்டாவது போட்டியிலும் வெற்றியின் விளிம்புவரை வந்து பரிதாபமாகத் தோற்றது மும்பை இந்தியன்ஸ் அணி.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. மும்பை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கப்டன் ரோகித் சர்மாவும், லெவிஸூம் களமிறங்கினர்.

ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியினரின் சிறப்பான பந்துவீச்சில் சிக்கி மும்பை இந்தியன்ஸ் அணி தடுமாறியது. சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. இதனால் மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. அந்த அணியில் லெவிஸ் 29 ஓட்டங்களும், சூர்யகுமார் யாதவ், பொலார்ட் ஆகியோர் தலா 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணி சார்பில் சந்தீப் சர்மா, பில்லி ஸ்டான்லேக், சித்தார்த் கவுல் தலா 2 விக்கெட்டும், ரஷித் கான், ஷகிப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 148 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை விரட்டியது ஹைதராபாத் அணி. அந்த அணியின் சஹாவும், தவானும் பலமான அடித்தளத்தை இட்டனர். ஆயினும் பின்னர் வந்த வீரர்கள் சொதப்ப, ஆட்டத்தின் போக்கு மும்பை இந்தியன்ஸ் அணியின் பக்கமாகத் திரும்பியது. எனினும் ஓரளவுக்குத் தூக்குப் பிடித்து ஆடியது ஹைதராபாத் அணி. 17 ஆவது ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 136 ஓட்டங்கள் என்ற சாதகமான நிலையில் ஹைதராபாத் அணி இருந்தது. ஏனெனில் கைவசம் 5விக்கெட்டுக்களும், தேவையான பந்துகளும் இருந்தன,. வெறும் 12 ஓட்டங்களை மட்டுமே எடுக்க வேண்டியிருந்தது. இந்த நிலையில் யூசுப் பதானையும், ரஷீட் கானையும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்கச் செய்து திருப்புமுனையை உண்டாக்கினார் பும்ரா. அவர் ஹட் ரிக் எடுக்கும் வாய்ப்பு கை நழுவிப் போனது. அடுத்த ஓவரை அற்புதமாக வீசி, இன்னும் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றி ஒரு ஓட்டத்தை மட்டுமே விட்டுக் கொடுத்தார் முஷ்தபிர் ரஹ்மான். கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் எடுத்தால் மட்டுமே வெற்றி என்ற நிலை ஹைதராபாத் அணிக்கு. ஆனால் கைவசம் இருப்பதோ ஒரு விக்கெட்டும், 6 பந்துகளும் மாத்திரமே. ஆனால் இறுதி ஓவரின் முதல் பந்தை சிக்ஸராக்கினார் ஹூடா. பின்னர் ஓடி ஓடி ஓட்டங்களைச் சேர்த்து, வெற்றியை நெருங்கினர். வெற்றிக்கு இரண்டு ஓட்டங்கள் தேவைப்பட்ட போது, ஹூடா கொடுத்த இலகுவான பிடியை நழுவவிட்டார் பும்ரா. அடுத்த பந்தில் பில்லி ஸ்டான்லேக் பவுண்டரி அடிக்க, ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வென்று தன் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது சன்றைசர்ஸ் அணி. மும்பை அணி சார்பாக புதிய சுழல்பந்து வீச்சாளர் மயங் மார்க்கண்டே 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# மழை ஆடிய ஆட்டத்தில் ராஜஸ்தான் வெற்றி!



ஜெய்ப்பூர், ஏப். 13

ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் டில்லி டேர் டெவில்ஸ் அணியை 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி வீழ்த்தியது.

ஜெய்ப்பூரில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு தொடங்கிய போட்டியில் முதலில் ராஜஸ்தான் துடுப்பெடுத்தாடியது.

ஷொர்ட் (6), பென் ஸ்டோக்ஸ் (16), சஞ்சு சாம்சன் (37), ரகானே (45), பட்லர் (29) ஆகியோரின் ஆட்டமிழப்பையடுத்து, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு ராஜஸ்தான் அணி 17.5 ஓவரில் 153 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ராகுல் திரிபாதி 15 ஓட்டங்களுடனும், கவுதம் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மழை விடாததால் ராஜஸ்தான் அணியின் ஆட்டம் தடைப்பட்டது. இதைத்தொடர்ந்து டில்லி டேர் டெவில்ஸ் அணிக்கு 6 ஓவர்களில் 71 ஓட்டங்கள் வெற்றியிலக்காக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

போட்டியின் கடைசி இரண்டு ஓவர்களில் டில்லி அணி வெற்றி பெற 35 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஆட்டத்தின் 5ஆவது ஓவரில் 10 ஓட்டங்கள் மட்டுமே பெறப்பட்டது. கடைசி ஓவரிலும் சொதப்ப, ஆட்டத்தின் இறுதியில், அந்த அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 60 ஓட்டங்களையே சேர்த்தது. இதனால், 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் வெற்றி பெற்றது. (ஐ)

# இரண்டில் இல்லை



சென்னை, ஏப். 13

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிராக விளையாடும்போது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ரெய்னா அடுத்த இரண்டு போட்டிகளில் விளையாடமாட்டார்.

ஐ.பி.எல். தொடரில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின்போது முன்னணி வீரரான சுரேஷ் ரெய்னா, துடுப்பெடுத்தாடியபோது கால் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் அடுத்து வரும் இரண்டு ஆட்டங்களில் சுரேஷ் ரெய்னா பங்கேற்கமாட் டார் என்று சென்னை அணி அறிவித்துள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அடுத்து, 15ஆம் திகதி கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியையும், 20ஆம் திகதி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியையும் எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)

# சங்காவுக்கு உயர் கௌரவம்

கொழும்பு, ஏப். 13

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் ஆலோசனைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு, கிரிக்கெட்டில் சர்வதேச வீரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும்.

இந்த அமைப்பில் நியமனம் பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

ரோஸ் டெய்லர் (நியூசிலாந்து), ஜேசன் ஹோல்டர் (மேற்கிந்திய தீவுகள்), வில்லியம் போர்டபீல்ட் (அயர்லாந்து), சகீப் அல் ஹஸன் (பங்களாதேஷ்), ஆரோன் பின்ச் (அவுஸ்ரேலியா), ஜே.பி. டுமினி (தென்னாபிரிக்கா), கைல் கோட்சயர் (ஸ்கொட்லாந்து), குமார் சங்கக்கார (இலங்கை), விக்ரம் சொலங்கி ( தலைவர் - இங்கிலாந்து), கிராம் ஸ்மித் (சுயாதீன குழு உறுப்பினர் - தென்னாபிரிக்கா)டொம் மப்பட் (தலைமை செயற்பாட்டு அதிகாரி).

ஐ.பி.எல். இன்றைய போட்டி

ROYAL CHALLENGERS BANGALORE Vs KINGS XI PUNJAB

றோஜல் சலஞ்சர்ஸ் பெங்களூர்
எதிர்
கிங்ஸ் லெவன் பஞ்சாப்
(இரவு 8 மணி)

# ஆடல், பாடலுக்குப் பின்னால்



சென்னை, ஏப். 13

வியாபார ரீதியாக அதிக வசூலை குவிக்கும் ஐ.பி.எல். போட்டியில் குறிப்பிடத்தக்க ஒன்று சியர் கேர்ள்ஸ் (Cheer Girls).

பவுண்டரி, சிக்ஸர், விக்கெட் விழ என ஒவ்வொரு முறைய்ும் நடனம் ஆடி ரசிகர்களை மகிழ்விக்கும் இவர்கள், பல இன்னல்களையும் சந்திக்கின்றனர்.

குறிப்பாக சியர் கேர்ள்ஸ் இந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள். அமெரிக்கா, லண்டன், மெக்சிக்கோ, பிரான்ஸ், பிரேசில், உக்ரைன் மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து அழைத்து வரப்படுகின்றனர். இவர்களுக்கான பெரிய சவாலே ஆடைகள்தான்.

"நடனம் ஆடும்போது ஆடையானது சௌகரியமாக இருக்க வேண்டும். பலமுறை எங்களுக்கு அசௌகரியமான ஆடைகள் தான் அளிக்கப்படுகின்றன" என வருத்தப்படுகின்றனர் இப்பெண்கள்.

"அதுமட்டுமின்றி போட்டியைக் காணவரும் சில ஆண்கள் வரம்பு மீறுவது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கும். அவர்கள் எங்களை நோக்கி கூறும் வார்த்தைகள், பார்க்கும் பார்வை போன்றவை கூடுதலாக வக்கிரமாக இருக்கும். கீழ்த்தரமான வார்த்தைகளால் அழைப்பார்கள், பேசுவார்கள் அது மிகுந்த வருத்தத்தை அளிக்கும்.

ரசிகர்கள் என்ற பெயரில் இருக்கும் சிலரின் செய்கைகளை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களை எதிர்த்து பேசவும் முடியாத சூழல்.

பலவேளைகளில் சிறிய போர்வை ஒன்றைப் போர்த்தித்தான் அமர்ந்திருப்போம். ஆட வேண்டிய நிலை வரும் போது, போர்வையை விலக்கிவிட்டு நடனம் ஆடுவோம். பிறகு மீண்டும் போர்வை போர்த்திக் கொள்வோம்.

இது மிகுந்த அசௌகரியத்தை உண்டாக்கும் நிகழ்வாகும். எல்லாப் போட்டிகளின் போதும் இத்தகைய நிகழ்வுகள் நடக்கும். அவற்றைக் கடந்து தான் நாங்கள் ஆடி வருகிறோம்.

எங்கள் நடனத் திறமையைப் பாராட்டி எங்களிடம் பேசுபவர்கள் மிகக்குறைவு. 90 சதவீதமானவர்கள் மோசமான பார்வைகளால் எங்களை சுட்டெரிப்பதால் அதனை நாங்கள் கண்டு கொள்வதில்லை" எனக் கூறுகின்றனர்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 13.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.